சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 166/2014

பெயர் திருமதி. பவுனம்மாள் நாள். 01.07.2025
க/பெ. மாரி

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 3 ½ ஏக்கர் மற்றும் 16 இன சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். ராகவப்பிள்ளை பெயரில் உள்ள சொத்துக்கும், இருசப்பிள்ளை பேரில் உள்ள பட்டா உள்ள சொத்துக்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு முன்பு நான், குமார் மற்றும் சிவகாமி ஆகியோர் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு பாகம் கோரி வழக்கு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். என் தாயார் லோகநாயகியின் சொந்த ஊர் புல்லம்பாக்கம் என்றால் சரிதான். அருணாசலத்தின் மகள் ராதிகாவைத்தான் குமார் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். என் சகோதரருடன் பேச்சுவார்த்தை உண்டு. ராகவ்பிள்ளை பேரில் ஆவணங்கள் இருந்து என் சகோதரர் அருணாச்சலம் பேரில் உள்ள சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் இருசப்பிளை, சின்னகுழந்தைக்கு விற்ற சொத்துக்களிலும் நான் பாகம் கோர வில்லை என்றால் எனக்கு தெரியாது. ராகவ்பிள்ளைக்கு கண்டிறச்சேரி கிராமம் தவிர நேத்தப்பாக்கம் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ராகவ்பிள்ளை பெயரில் உள்ள பத்திரங்கள் என்றால் சரிதான்.

2) இருசப்பிள்ளை பெயரில் பட்டாவின் மொத்த விஸ்தீரணம் எனக்கு

தெரியாது. என் அருணாச்சலத்திடம் எவ்வளவு சொத்துக்கள் உள்ளன என்று எனக்கு தெரியாது. ராகவ்பிள்ளைக்கு மொத்த நிலங்கள் 3½ ஏக்கர் தான். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மொத்த நிலங்கள் 6 ஏக்கர் என்று சொன்னாலும் சரியல்ல. என் சகோதரர் இருசப்பிள்ளை பெயருக்கு பொது அதிகாரம் வழங்கி அவர் சின்னபிள்ளைக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் அருணாச்சலம் பெயரில் உள்ள சொத்துக்களைத் தவிர்த்து இருசப்பிள்ளை பெயரில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை.

3) நான் தாக்கல் செய்துள்ள பட்டாக்களைத் தவிர்த்து வேறு மூன்று பட்டாக்கள் இருசப்பிள்ளை பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இருசப்பிள்ளை பெயரில் உள்ள பட்டா தவறு என்று வட்டாட்சியரிடம் மனு ஏதும் நான் அளிக்கவில்லை. எனக்கு இரண்டு மகன்கள். மூத்த மகனின் வயது 40. எனக்கு திருமணம் ஆகி 50 வருடங்கள் ஆகிறது. இருசப்பிள்ளை பெயரில் பட்டா எப்பொழுது வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆனால் இருசப்பிள்ளை மற்றும் அருணாச்சலம் பெயரில் தனித்தனி பட்டா வழங்கப்பட்டது பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அருணாச்சலமும், இருசப்பனும் சேர்ந்து காசிலிங்கம் என்பவருக்கு சொதுக்களை விற்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு 1 முதல் 6 இன சொத்துக்களுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சின்னகுழந்தை பெயரில் உள்ள ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. அவர் பெயரில் பத்திரம் உள்ளதே எனக்கு தெரியாது. அருணாச்சலத்திடம் இருசப்பிள்ளை பெயரில் பொது அதிகாரம் வழங்கியது குறித்து நான் கேட்கவில்லை. ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் சின்ன குழந்தை தமிழ்மாறன் வகையறா மீது மு.வ.238/2013 மற்றும் 239/2013 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியாது. அருணாசலத்தை இவ்வழக்கில் ஏன்

தரப்பினராக சேர்த்தேன் என்றால் அவர் என் உடன் பிறந்தவர் என்பதால் சேரத்துள்ளேன். அருணாச்சலம் புல்லம்பாக்கம் கிராமத்தில் சொத்துக்கள் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது. தமிழ்மாறன், மணிகண்டன் மற்றும் இருசப்பிள்ளை ஆகியோர் சொத்துக்களை பரிவர்த்தனை செய்து கொண்டது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் லோகநாயகியின் சகோதரர் தான் எல்லப்பிள்ளை என்றால் சரிதான்.

4) வழக்கிற்கு முன்பு எல்லப்பிள்ளை மூலமாக பஞ்சாயத்து ஏற்பட்டது என்றால் இல்லை. இவ்வழக்கு சொத்துக்களில் வீட்டு மனை இல்லை. ஆனால் ராகவ்பிள்ளை பெயரில் உள்ள சொத்துக்களில் வீட்டு மனை இருந்து வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களில் நான் பயிர் வைக்கவில்லை, ஆனால் வரப்போக இருந்து எனக்கு கொடுப்பார்கள். இதன் விவரத்தை என் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். வழக்கு 8வது இன சொத்து ராகப்பிள்ளை அல்லது இருசப்பிள்ளைக்கு சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. நான் 5 பாகம் யார் யாருக்கு கேட்டுள்ளேன் சிவகாமி, இருசப்பிள்ளை, அருணாச்சலம் மற்றும் பவுனம்மாள் ஆகும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. ராகவ்பிள்ளை இறந்தபின்புதான் எனக்கும், அருணாச்சலத்திற்கும் திருமணம் ஆனது. அருணாச்சல்ம் பிள்ளைபெயரில் உள்ள நேத்தப்பாக்கம் கிராம சொத்து'ககளை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான், என் சகோதர சகோதரிகள் வேண்டுமென்றே இருசப்பிள்ளை பெயரில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும் பாகம் கோரியுள்ளோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்து 40 வருடங்கள் ஆகிறது. அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரது மகன்களுக்கு சொததுக்களை சரிபாதியாக பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பெண் பிள்ளைகளுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து வைத்ததால்தான் என் தகப்பானர் ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் சொத்துக்களை பிரித்துக் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆவணங்களில்

கண்ட விஸ்தீரணங்களுக்கும், வழக்குரையில் கண்ட விஸ்தீரணங்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன என்றால் சரியல்ல.

5) திருமணத்திற்கு பிறகு நேத்தப்பாக்கம் மற்றும் கெண்டிரச்சேரி சொத்துக்களை அனுபவம் செய்தோமா என்றால் நான் போய் வர எனக்கு அங்கு அரிசி கொடுப்பார்கள். 1988ம் வருடம் என் தந்தை மற்றம் சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாக்ப்பிரிவினையை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் அவர்கள் முன்னிலையிலும், என் முன்னிலையிலும் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. நான் எக்காலத்திலும் வழக்குச் சொத்துக்களில் ஆண் பங்குதாரர்களுடன் அனுபவம் செய்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இருசப்பிள்ளை மற்றும் அருணாச்சலப்பிள்ளை ஆகியோர்களுக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே தனித்தனி பட்டா அளித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பரிகாரம் பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிகப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொதுக்கள் அனைத்துதம் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையான சொதது என்றால் சரியல்ல. நான் கூட்டுக் குடும்ப உறுப்பினர் அல்ல என்றாலும், நான் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இரண்டு ஆண் வாரிசுகளின் அனுபவம் சட்டப்படி காலத்திற்கு மேல் உள்ளது என்பதால் நான் எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. என் சகோதர் அருணாச்சலம் பெயரில் உள்ள சொததுக்ளை தவிர்த்து இவ்வழக்கு தீய எண்ணத்துடன் தாக்கல் செய்ப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.